ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 1804/50 - 2013 අප්‍රේල් මස 05 වැනි සිකුරාදා - 2013.04.05
*1804/50 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 05 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*
*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### இலங்கை உள்நாட்டு இறைவரிச் சேவையின் பிரமாணக் குறிப்பு

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1974, ஒற்றோபர் 15 ஆந் திகதிய 133/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கை உள்நாட்டு இறைவரிச் சேவையின் பிரமாணக் குறிப்பிற்கும், 1975, யூன் 20 ஆந் திகதிய 169 ஆம் இலக்க, 1976, திசெம்பர் 01 ஆந் திகதிய 241/9 ஆம் இலக்க, 1984, சனவரி 13 ஆந் திகதிய 280 ஆம் இலக்க, 1991, ஒற்றோபர் 04 ஆந் திகதிய 682/27 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானிகள் மூலம் வெளியிடப்பட்ட, திருத்தப்பட்ட சேவைப் பிரமாணக் குறிப்பில் காலத்துக்குக் காலம் செய்யப்பட்ட திருத்தங்களின் ஏற்பாடுகளுக்கு இணங்க எடுக்கப்பட்ட அல்லது அதனடிப்படையில் எடுக்கப்பட்டது எனக் கருதிய நடவடிக்கைகளுக்கும் பாதிப்பில்லாதவாறு கீழே காட்டப்பட்டுள்ள உள்நாட்டு இறைவரிச் சேவைப் பிரமாணக் குறிப்பு பதிலீடு செய்யப்படுகின்றது.*

*அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,*

*ரீ. எம். எல். சீ. சேனாரத்ன,*
*செயலாளர்,*
*அரசாங்க சேவை ஆணைக்குழு.*

*2013.04.05.*

### உள்நாட்டு இறைவரிச் சேவைப் பிரமாணக் குறிப்பு

*1.* **நடைமுறைக்கு வரும் திகதி :**
*இச்சேவைப் பிரமாணக் குறிப்பு 2012, ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும்.*

*2.* **நியமன அலுவலர் பற்றிய விபரம்:**

*2.1 நியமன அலுவலர் : அரசாங்க சேவை ஆணைக்குழு*

*3.* **ஊழியர் வகை பற்றிய விபரங்கள்:**

| | | | |
|---|---|---|---|
| *3.1* | *ஊழியர் வகை* | - | *சிரேஷ்ட நிறைவேற்றுத் தரம்*<br>*நிறைவேற்றுத் தரம்* |
| *3.2* | *தரம்* | - | *நிறைவேற்றுத் தரம் - தரம் III*<br>*நிறைவேற்றுத் தரம் - தரம் II*<br>*நிறைவேற்றுத் தரம் - தரம் I*<br>*சிரேஷ்ட நிறைவேற்றுத் தரம் - விசேட தரம்* |

*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

*3.3* **ஒப்படைக்கப்படும் கடமைகள் தொடர்பான பொது வரைவிலக்கணம் :**

*உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தின் நிர்வாகத்தின் கீழ் உள்ள அல்லது அவரது நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்படும் அல்லது கட்டளைச் சட்டங்கள் அல்லது அவற்றுக்காக இடைநேர்விளைவான ஒழுங்குவிதிகள், சுற்றறிக்கைகள் ஏற்பாடுகள் என்பவற்றுக்கு இணங்கிய வகையில் அரசாங்கத்திற்கு அறவிடப்பட வேண்டிய வரி வருமானங்களை வினைத்திறன்மிக்க முறையில் அறவீடு செய்தல்.*

*4.* ***பதவியின் தன்மை*** : *நிரந்தரமானது, ஓய்வூதியம் உரித்துடையது.*

5. ***சம்பளங்கள் :***

*5.1* ***சம்பளக் குறியீட்டு இலக்கங்கள் :*** *சிரேஷ்ட நிறைவேற்றுத் தரம் SL -3-2006*
*நிறைவேற்றுத் தரம் SL -1-2006*

*5.2* ***சம்பளத் திட்டம்:***
*சிரேஷ்ட நிறைவேற்றுத் தரம் SL -3-2006 - ரூபா 42,390 - 12 x 1,310 - ரூபா 58,110*

*நிறைவேற்றுத் தரம் SL -1-2006 - ரூபா 22,935 - 10 x 645 - 8 x 790 - 17 x 1,050 - ரூபா 53,555*

*5.3* ***தரப்படுத்தல் முறைமைக்கான ஆரம்பச் சம்பளப் படிமுறை:***

| *தரம்* | *சம்பளப் படிமுறை* | *சம்பளம்* |
|---|---|---|
| *தரம் III* | *1(SL-1-2006)* | *22,935* |
| *தரம் II* | *12(SL-1-2006)* | *30,175* |
| *தரம் I* | *20(SL-1-2006)* | *36,755* |
| *விசேட தரம்* | *1(SL-3-2006)* | *42,390* |

*6.* ***ஊழியர் வகைக்குரிய பதவிகள்***

*6.1* ***அங்கீகரிக்கப்பட்ட பதவிப் பெயர்கள், அனுமதியளிக்கப்பட்ட பதவி எண்ணிக்கைகள், அவற்றுக்கு ஒப்படைக்கப்படும் பணிகள்***

| *அனுமதியளிக்கப்பட்ட பதவிப் பெயர்/ தரம்* | *அனுமதி வழங்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை* | *கடமைகள்* |
|---|---|---|
| *ஆணையாளர் நாயகம்/விசேட தரம்* | *01* | *திணைக்களத்தின் முழு மொத்தச் செயலாற்றுகை தொடர்பான அனைத்து செயற்பாடுகளையும் மேற்பார்வை செய்தல், சந்தர்ப்பங்களுக்கு ஏற்றவாறு அறிவுறுத்தல்கள் வழங்குதல்/கட்டளைகள் வழங்குதல்.* |
| *பிரதி ஆணையாளர் நாயகம்/ விசேட தரம்* | *07* | *ஒவ்வொரு விடயப் பரப்புக்குமுரிய இலக்குகளை அடையப் பெறுவதற்குப் பொருத்தமான திட்டங்களையும் வழிமுறைகளையும் கண்டறிதல்.* |
| *சிரேஷ்ட ஆணையாளர்/விசேட தரம்* | *22* | *ஒவ்வொரு விடயப் பரப்புக்குமுரிய இலக்குகளை அடையப் பெறுவதற்காகக் கண்டறியப்பட்ட திட்டங்களுக்கும் வழிமுறைகளுக்கும் ஏற்ப காலத்துக்குப் பொருத்தமாகச் செயற்படுத்தக்கூடிய நிகழ்ச்சித் திட்டங்களை உருவாக்குதல்.* |

| அனுமதியளிக்கப்பட்ட பதவிப் பெயர்/தரம் | அனுமதி வழங்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை | கடமைகள் |
|---|---|---|
| ஆணையாளர்/தரம் I | 90 | ஒவ்வொரு விடயப் பரப்புக்குமுரிய இலக்குகளை அடையப் பெறுவதற்காகக் கண்டறியப்பட்ட திட்டங்களுக்கும் வழிமுறைகளுக்கும் இணங்க காலத்துக்குப் பொருத்தமான நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல், மேற்பார்வை செய்தல், ஒருங்கிணைத்தல். |
| சிரேஷ்ட பிரதி ஆணையாளர், பிரதி ஆணையாளர், உதவி ஆணையாளர் | 1107 | ஒவ்வொரு விடயத் துறைக்குமான இலக்குகளை அடைவதற்காக அடையாளம் காணப்பட்டுள்ள காலத்துக்குப் பொருத்தமான நிகழ்ச்சிகளை முறையாக நடைமுறைப்படுத்துதல். |
| தரம் I<br>தரம் II<br>தரம் III | | |

6.2 ***இணைந்த அலுவலர் எண்ணிக்கை :*** 1197 (தரம் III, II, I)

**குறிப்பு** :- அரசாங்க சேவையின் தேவைப்பாடுகளுக்கு இணங்க காலத்துக்குக் காலம் இவ் எண்ணிக்கை மாற்றமடைய முடியும்.

07. **ஆட்சேர்ப்பு முறை:**

7.1 ***ஆட்சேர்ப்பு வீதம் :***

| முறை | வீதம் |
|---|---|
| திறந்த | 100 % |

7.2 ***திறந்த ஆட்சேர்ப்பு :***

7.2.1 ஆட்சேர்ப்புச் செய்யப்படும் தரம் : நிறைவேற்றுத் தரம் III

7.2.1.1 கல்வித் தகைமைகள் :

(i) பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து அல்லது பட்டம் வழங்கும் நிறுவனமாகப் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றிலிருந்து முதலாம் அல்லது இரண்டாம் வகுப்புச் சித்தியுடனான பட்டம் ஒன்றைப் பெற்றிருத்தல்.

அல்லது

(ii) உயர் நீதிமன்ற சட்டத்தரணியாக இருத்தல்.

அல்லது

(iii) பட்டயக் கணக்காளராக இருத்தல்.

7.2.1.2 தொழிற் தகைமைகள் : பொருத்தமற்றது.

7.2.1.3 அனுபவம் : பொருத்தமற்றது.

7.2.1.4 உடற்தகைமை : ஒவ்வொரு விண்ணப்பதாரியும் இலங்கையின் எந்தவொரு பிரதேசத்திலும் பணிபுரிவதற்கான உடல், உளரீதியிலும் மற்றைய எல்லா வகையிலும் பொருத்தப்பாடுகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

7.2.1.5 ஏனையவை :

I. விண்ணப்பதாரர் இலங்கைப் பிரசைகளாக இருத்தல் வேண்டும் ;

II. சிறந்த நடத்தையுடையவராக இருத்தல் வேண்டும் ;

III. ஏதேனும் ஒரு சமயப் பிரிவின் மதகுருவாக உள்ள ஒருவர் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்;

IV. பரீட்சார்த்தியொருவர் திறந்த போட்டிப் பரீட்சைக்கு இரு தடவைகளுக்கு மேல் தோற்றக்கூடாது;

V. ஆட்சேர்ப்புக்கான அனைத்துத் தகைமைகளையும், அத்தகைமைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்று விண்ணப்பம் கோரும் வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்படும் திகதியில் எல்லா வகையிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்;

7.2.2 **வயது** :

7.2.2.1 குறைந்தபட்ச வயதெல்லை : 22 வருடங்கள்;

7.2.2.2 உயர்ந்தபட்ச வயதெல்லை : 28 வருடங்கள்;

7.2.2.3 அரசாங்க சேவையில், மாகாண அரசாங்க சேவையில் உள்ளவர்களுக்கான உயர்ந்த பட்ச வயதெல்லை 35 வருடங்களாகும்.

7.2.3 **ஆட்சேர்ப்பு முறை** :

7.2.3.1 எழுத்துப் பரீட்சை (பின்னிணைப்பு 01 ஐப் பார்க்கவும்)

| பாடங்கள் | அதிகப்பட்சப் புள்ளிகள் | சித்தியடைவதற்கான (குறைந்தபட்சப்) புள்ளிகள் |
|---|---|---|
| கிரசித்தல் | 100 | 40 |
| நுண்ணறிவு | 100 | 40 |
| பொது அறிவு | 100 | 40 |

7.2.3.1.1 பரீட்சை நடாத்தும் அதிகாரி : பரீட்சை ஆணையாளர் நாயகம்

7.2.3.2 தொழிற் தகைமைகள் : பொருத்தமற்றது.

7.2.3.3 கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை : பொருத்தமற்றது.

7.2.3.4 சாதாரண நேர்முகப் பரீட்சை : (புள்ளிகள் வழங்கப்படமாட்டாது).

நிறைவேற்ற எதிர்பார்க்கும் குறிக்கோள்கள் : இலங்கை உள்நாட்டு இறைவரிச் சேவைப் பிரமாணக்குறிப்பு மற்றும் அதற்கிணங்க வெளியிடப்படும் வர்த்தமானி அறிவித்தல்களில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளனவா என்பதைப் பரீட்சித்தலும் உடற்தகைமைகளைப் பரீட்சித்தலும்.

**குறிப்பு** : நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட வேண்டிய விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை, சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு எழுத்துப் பரீட்சையில் அவர்கள் வெளிக்காட்டிய தேர்ச்சி ஒழுங்குமுறை, ஆட்சேர்ப்புச் செய்யப்பட உத்தேசித்துள்ள எண்ணிக்கை என்பவற்றின் அடிப்படையில் நியமன அதிகாரியினால் தீர்மானிக்கப்படும்.

7.2.3.4.1 **பொது நேர்முகப் பரீட்சைச் சபையை நியமிக்கும் அதிகாரி** : - அரசாங்க சேவை ஆணைக்குழு

7.2.4 விண்ணப்பம் கோரும் முறை : அறிவித்தல்களை அரசாங்க வர்த்தமானியிலும் இணையத் தளத்திலும் பிரசுரிப்பதன் ஊடாக விண்ணப்பங்கள் கோரப்படும்.

7.3 **மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்பு** : பொருத்தமற்றது.

7.4 **சேவை மூப்பு, தேர்ச்சி என்பவற்றின் அடிப்படையிலான ஆட்சேர்ப்பு** : பொருத்தமற்றது.

8. **வினைத்திறன் தடைதாண்டல்:**

| 8.1 வினைத்திறன் தடைதாண்டல் வகை | எத்தனை வருடங்களுக்கு முன்னர் வினைத்திறன் தடைதாண்டலில் சித்தியடைய வேண்டும் என்பது | வினைத்திறன் தடைதாண்டலின் தன்மை எழுத்து/தொழில்/சான்றிதழ் பாடநெறிகள்/வேறு |
|---|---|---|
| I ஆம் வினைத்திறன் தடைதாண்டல் | இலங்கை உள்நாட்டு இறைவரிச் சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு மூன்று (03) வருடங்கள் பூர்த்தியடைய முன்னர் | எழுத்துப்பரீட்சை - பின்னிணைப்பு 02 ஐப் பார்க்கவும். |
| II ஆம் வினைத்திறன் தடைதாண்டல் | இலங்கை உள்நாட்டு இறைவரிச் சேவையின் தரம் II இற்கு தரம் உயர்த்தப்பட்டு மூன்று (03) வருடங்கள் பூர்த்தியடைய முன்னர் | எழுத்துப்பரீட்சை - பின்னிணைப்பு 03 ஐப் பார்க்கவும். |
| III ஆம் வினைத்திறன் தடைதாண்டல் | இலங்கை உள்நாட்டு இறைவரிச் சேவையின் தரம் I இற்கு தரம் உயர்த்தப்பட்டு ஐந்து (05) வருடங்கள் பூர்த்தியடைய முன்னர் | எழுத்துப்பரீட்சை - பின்னிணைப்பு 04 ஐப் பார்க்கவும். |

8.2 ***வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை எவ்வளவு காலத்துக்கு ஒருமுறை நடாத்தப்படும் :*** வருடத்திற்கு இருமுறை.

8.3 ***வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை நடாத்துகின்ற அதிகாரி :*** உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம்.

9. **திணைக்களப் பரீட்சைகள் :** இலங்கை உள்நாட்டு இறைவரிச் சேவையின் வகுப்பு III இற்கு உள்வாங்கப்பட்டு ஆறு (06) வருடங்களுக்குள் பின்னிணைப்பு 05 இல் குறிப்பிடப்பட்டுள்ள திணைக்களப் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

10. **மற்றைய அரச கரும மொழித் தேர்ச்சி:**

10.1 அரச கரும மொழித்தேர்ச்சி : ஆங்கில மொழிமூலத்தில் சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட அலுவலர்கள் தகுதிகாண் காலத்தினுள் ஏதேனும் ஒரு அரச கரும மொழியில் தேர்ச்சிபெறுதல் வேண்டும்.

அத்தேர்ச்சியானது கல்விப்பொதுத் தராதர சாதாரண தரப்பரீட்சையில் சிங்கள/தமிழ் முதல் மொழிப் பாடத்தில் சித்தியடைதல் (இரண்டாம் மொழி அல்லது விருப்பத்திற்குரிய பாடம் அல்ல) அத்துடன் அரச கருமமொழித் திணைக்களத்தினால் நடாத்தப்படும் வாய்மொழிப் பரீட்சையில் சித்தியடைதல் அல்லது அரச கரும மொழித் திணைக்களத்தினால் நடாத்தப்படும் விசேட தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடைதல்.

10.2 ***மற்றைய அரச கரும மொழித்தேர்ச்சி :***

| தேர்ச்சிபெற வேண்டிய காலப்பகுதி | பெறவேண்டிய தேர்ச்சி மட்டம் | மொழித்தேர்ச்சி | |
|---|---|---|---|
| | | சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட மொழி மூலம் | தேர்ச்சி பெற வேண்டிய மொழிமூலம் |
| சேவைக்கு உள்வாங்கப் பட்டு ஐந்து (05) வருடங்களுக்குள் | 07/2007 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகப் சுற்றறிக்கைக்கு இணங்க உரிய மட்டத்தில் மொழித் தேர்ச்சியைப் பெறுதல் வேண்டும். | சிங்களம்<br>தமிழ்<br>ஆங்கிலம் | தமிழ், சிங்களம் உப பந்தி 10.1 இன் கீழ் தேர்ச்சிபெற்றுள்ள அரச கரும மொழியல்லாத மற்றைய அரச கரும மொழி |

11. **தரமுயர்வு வழங்குதல் :**

11.1 ***தரம் III இல் இருந்து II இற்கு தரமுயர்வு வழங்குதல் :***

11.1.1 சாதாரண செயலாற்றுகைக்கு இணங்க

11.1.1.1 பூர்த்தி செய்யப்பட வேண்டிய தேவைப்பாடுகள் :

I. தரம் III இல் நியமனம் நிரந்தரமாக்கப்பட்டிருத்தல் (பதவியில் நிரந்தரமாக்கப்பட்டதற்கான கடிதம் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்);

II. சேவையில் தரம் III இல் ஆகக் குறைந்தது பத்து (10) வருடங்கள் செயலூக்கம்மிக்கதும் திருப்திகரமானதுமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தலும் பத்து (10) சம்பள ஏற்றங்களைப் பெற்றிருத்தலும்;

III. உரிய வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சைகளிலும் திணைக்களப் பரீட்சையிலும் உரிய தினத்தில் சித்தியடைந்திருத்தல்.

IV. மற்றைய அரச கரும மொழியில் உரிய மட்டத்திலான தேர்ச்சியைப் பெற்றிருத்தல்.

V. தரயமுயர்வுத் திகதிக்கு உடன் முன்னரான ஐந்து (05) வருட காலத்தில் திருப்திகரமான சேவையைக் கொண்டிருத்தல்.

VI. அங்கீகரிக்கப்பட்ட செயலாற்றுகைத் தரக்கணிப்பு
நடைமுறைக்கு இணங்க தரமுயர்வு வழங்குவதற்கு முன்னர் பத்து (10) வருட காலத்தில் திருப்திகரமான அல்லது அதனை விட உயர்ந்த மட்டத்திலான செயலாற்றுகையை வெளிப்படுத்தியிருத்தல்.

*11.1.1.2 தரமுயர்வு வழங்கும் முறை:*

தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள அலுவலர்கள் உரிய படிவங்களில் அரசாங்க சேவை ஆணைக்குழுவிடம் கோரிக்கை விடுக்குமிடத்து, தகைமைகள் பரீட்சிக்கப்பட்டதன் பின்னர் தகைமை பெறும் தினத்திலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் தரம் IIஇற்குத் தரமுயர்வு வழங்கப்படும்.

*11.1.2 விசேட செயலாற்றுகையின் அடிப்படையில்:*

*11.1.2.1 பூர்த்தி செய்ய வேண்டிய தகைமைகள் :*

I. சேவையில் தரம் III இல் ஆகக் குறைந்தது ஆறு (06) வருடங்கள் செயலூக்கம்மிக்கதும் திருப்திகரமானதுமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருத்தலும் ஆறு (06) சம்பள ஏற்றங்களையும் உரிய தினத்தில் பெற்றிருத்தலும்.

II. முதலாவது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையிலும் திணைக்களப் பரீட்சையிலும் உரிய தினத்தில் சித்தியடைந்திருத்தல்;

III. மற்றைய அரச கரும மொழியில் உரிய மட்டத்திலான தேர்ச்சியை உரிய காலத்தினுள் பெற்றிருத்தல் ;

IV. தரமுயர்வுக்கான தகைமைகளைப் பெறுவதற்கு உடன் முந்திய ஐந்து (05) வருட காலத்தில் திருப்திகரமான சேவையைக் கொண்டிருத்தல்;

V. தரம் III இல் நியமனம் நிரந்தரமாக்கப்பட்டிருத்தல் (பதவியில் நிரந்தரமாக்கப்பட்டதற்கான கடிதம் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்);

VI. அங்கீகரிக்கப்பட்ட செயலாற்றுகைத் தரக்கணிப்பு நடைமுறைக்கு இணங்க தரமுயர்வு வழங்குவதற்கு உடன் முந்திய ஆறு (06) வருட காலத்தில் விசேட செயலாற்றுகையை* வெளிப்படுத்தியிருத்தல்.

***குறிப்பு** .- 1.விசேட செயலாற்றுகைத் தரங்கணிப்பு முறையொன்று அரசாங்கத்தினால் அறிமுகப் படுத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும் வரை தற்போது நடைமுறையிலுள்ள வருடாந்த செயலாற்றுகைத் தரங்கணிப்பில் திருப்திகரமான மட்டத்தில் அல்லது அதனை விட உயர்ந்த மட்டத்தில் செயலாற்றுகையை வெளிப்படுத்தியுள்ள அலுவலர்களுக்கு, விசேட செயலாற்றுகையின் அடிப்படையில் தரமுயர்வு பெறுவதற்கான உளச்சார்பு எழுத்துப் பரீட்சைக்குத் தோற்றுவதற்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

2. சாதாரண மட்டத்திலான செயலாற்றுகையின் அடிப்படையில் தரமுயர்வு வழங்கும்போது , உரிய தினத்தில் வினைத்திறன் தடை தாண்டலில் சித்தியடையத் தவறும் அலுவலர்களின் தரமுயர்வுத் திகதி, வினைத் திறன் தடைதாண்டலில் சித்தியடையத் தவறிய காலத்துக்குச் சமனான காலப்பகுதியொன்றினால் தாமதிக்கப்பட வேண்டும்.

*11.1.2.2 தரமுயர்வு வழங்கும் முறை:*

*மேலே குறிப்பிட்ட தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள அலுவலர்கள் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றினால் நடாத்தப்படும் எழுத்து மூலமான உளச்சார்புப் பரீட்சையொன்றுக்குத் தோற்ற முடியும். அதில் சித்தியடைபவர்கள் உரிய படிவத்தின் ஊடாக அரசாங்க சேவை ஆணைக்குழுவிடம் கோரிக்கை விடுக்குமிடத்து, நியமன அதிகாரியினால் தகைமைகள் பரீட்சிக்கப்படும். தொடர்புடைய ஏனைய தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்துள்ள அலுவலர்களுக்கு நியமனத் திகதியிலிருந்து ஆறு (06) வருடங்கள் பூர்த்தியடையும் தினத்திலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் தரம் II இற்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் தரமுயர்வு வழங்கப்படும் (பரீட்சைக்கான பாடத்திட்டம் பின்னிணைப்பு 06 இல் காட்டப்பட்டுள்ளது).*

**குறிப்பு** :

*(அ)* *விசேட செயலாற்றுகைத் தரக்கணிப்பின் கீழ் தரமுயர்வு வழங்கும் போது நடாத்தப்படும் பரீட்சையில் சித்தியடைவதற்கு ஆகக் குறைந்தது 60% புள்ளிகளைப் பெறுதல் வேண்டும். மேலும் விசேட செயலாற்றுகையின் தரமுயர்வு வழங்குவதற்கான பரீட்சை வருடத்திற்கு ஒரு முறை நடாத்தப்படும். ஒரு அலுவலர் இப்பரீட்சைக்கு ஒருமுறை மாத்திரமே தோற்ற முடியும்.*

*(ஆ)* *அலுவலர் ஒருவரின் சக்திக்கு அப்பாற்பட்ட விசேட காரணம் ஒன்றினால் உரியதினத்தில் விசேட செயலாற்றுகையின் கீழ் தரமுயர்வு வழங்குவதற்கான பரீட்சைக்குத் தோற்ற முடியாது போகுமிடத்து, பின்னர் நடாத்தப்படும் பரீட்சையொன்றுக்கு அவ் அலுவலர் தோற்ற முடியும். அத்தகைய அலுவலர் ஒருவருக்கு வழங்கப்படும் விசேட செயலாற்றுகையின் கீழான தரமுயர்வு அப்பரீட்சையில் சித்தியடைந்த தினத்திலிருந்தே நடைமுறைக்கு வரும்.*

***11.2 தரம் II இலிருந்து தரம் I இற்கு தரமுயர்வு வழங்குதல்:***

*11.2.1 பூர்த்தி செய்ய வேண்டிய தகைமைகள் :*

I. *ஊழியர் வகையில் தரம் II இல் (07) வருடங்கள் செயலூக்கம்மிக்கதும் திருப்திகரமானதுமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருத்தலும் பெறவேண்டிய ஏழு (07) சம்பள ஏற்றங்களையும் பெற்றிருத்தலும் ;*

II. *இரண்டாவது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையில் உரிய தினத்தில் சித்தியடைந்திருத்தல்;*

III. *தரமுயர்வுத் திகதிக்கு உடன் முன்னரான ஐந்து (05) வருட காலத்தில் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்;*

IV. *அங்கீகரிக்கப்பட்ட செயலாற்றுகை தரக்கணிப்பு நடைமுறைகளுக்கு இணங்க தரமுயர்வுக்கு முந்திய ஏழு (07) வருட காலத்தில் திருப்திகரமான அல்லது அதனை விட உயர் மட்டத்திலான செயலாற்றுகையை வெளிப்படுத்தியிருத்தல்.*

V. *பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைகழகமொன்றில் அல்லது பட்டம் வழங்கும் நிறுவனமாக பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள நிறுவனமொன்றில் அல்லது அரசாங்க சேவை ஆணைக்குழுவினால்' அங்கீகரிக்கப்பட்ட உயர்கல்வி நிறுவனமொன்றில் பின்னிணைப்பு "07" இல் குறிப்பிடப்பட்டுள்ள பாடங்களில் ஏதேனும் ஒரு பாடத்தில் அல்லது உள்ளடங்கும் பாடப்பரப்பில் பட்டப்பின் பட்டம் ஒன்றைப் பெற்றிருத்தல்.*

*11.2.2 தரமுயர்வு வழங்கும் முறை:*

*தகைமைகளைப் பூர்த்தி செய்யும் அலுவலர்கள் உரிய மாதிரிப் படிவத்திற்கு இணங்க அரசாங்க சேவை ஆணைக்குழுவிடம் கோருமிடத்து, அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் தகைமைகள் பரீட்சிக்கப்பட்டதன் பின்னர் தகைமை பெறும் தினத்திலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் தரம் I இற்கு தரமுயர்வு வழங்கப்படும்.*

*11.3* ***தரம் I இலிருந்து விசேட தரத்திற்கு தரமுயர்வு வழங்குதல் ;***

11.3.1 பின்வரும் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்துள்ள தரம் I அலுவலர்களுக்குத் தரமுயர்வு மூலம் மாத்திரம் சேவையின் விசேட தரத்திற்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் தரமுயர்வு வழங்கப்படும்:- அதற்கிணங்க,

(i) பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது பட்டம் வழங்கும் நிறுவனமாக பல்கலைக்கழக மானிய ஆணைக்கழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள நிறுவனமொன்றில் அல்லது அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட உயர்கல்வி நிறுவனமொன்றில் பின்னிணைப்பு "07" இல் குறிப்பிடப்பட்டுள்ள பாடங்களில் ஏதேனும் ஒரு பாடத்தில் அல்லது அது உள்ளடங்கும் பாடப்பரப்பில் பட்டப் பின் பட்டம் ஒன்றைப் பெற்றித்தல் ;

(ii) தரமுயர்வுக்குத் தகைமை பெறும் தினத்தில் இலங்கை உள்நாட்டு இறைவரிச் சேவையின் தரம் I இல் ஐந்து (05) வருடங்கள் செயலூக்கம் மிக்கதும் திருப்திகரமானதுமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தலும் முதலாம் தரத்திற்குத் தரமுயர்த்தப்பட்டதன் பின்னர் ஐந்து (05) சம்பள ஏற்றங்களைப் பெற்றிருத்தல் ;

(iii) தரமுயர்வுக்குத் தகைமை பெறும் தினத்தில் இலங்கை உள்நாட்டு இறைவரிச் சேவையின் 18 வருடங்களுக்குக் குறையாத செயலூக்கம்மிக்கதும் சேவைக்காலத்தைக் கொண்டிருத்தல் ;

(iv) தரமுயர்வுக்குத் தகுதிபெறும் திகதிக்கு உடன் முன்னரான ஐந்து (05) வருட காலத்தில் வருடாந்த செயலாற்றுகை திருப்திகரமானதாக அல்லதுஉயர் மட்டத்தில் காணப்படுதல் ;

(v) தரமுயர்வுக்குத் தகுதிபெறும் தினத்திற்கு உடன் முன்னரான ஐந்து (05) வருட காலத்தில் திருப்திகரமான சேவைக் காலத்தைக் கொண்டிருத்தலும் ஒழுக்காற்றுத் தண்டனைக்கு உட்படாதிருத்தலும்.

11.3.2 நியமன முறை:

(i) அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அனுமதி வழங்கப்பட்ட நேர்முகப் பரீட்சைச் சபை ஒன்றின் மூலம் நேர்முகப் பரீட்சைக்கு உட்பமுடுத்தப்பட்டு அதன் பெறுபேறுகள் மற்றும் நிலவும் வெற்றிடங்கள் எண்ணிக்கைக்கு இணங்க விசேட தரத்திற்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் தரமுயர்வு வழங்கப்படும்.

(ii) நேர்முகப் பரீட்சையின் போது சேவை மூப்பு மற்றும் திறமைகள் தொடர்பில் கவனம் செலுத்தப்படும்.

*12.* **பதவிகளில் நியமித்தல் :**

*12.1* ***தகைமைகள்:***

| பதவி | தகைமை |
|---|---|
| ஆணையாளர் நாயகம்/ பிரதி ஆணையாளர் நாயகம் | இலங்கை உள்நாட்டு இறைவரிச் சேவையின் விசேட தரத்திலுள்ள அலுவலர் ஒருவராக இருத்தல் வேண்டும். |
| சிரேஷ்ட ஆணையாளர் | இலங்கை உள்நாட்டு இறைவரிச் சேவையின் விசேட தரத்திலுள்ள அலுவலர் ஒருவராக இருத்தல் வேண்டும். |
| ஆணையாளர் | இலங்கை உள்நாட்டு இறைவரிச் சேவையின் தரம் I இலுள்ள அலுவலர் ஒருவராக இருத்தல் வேண்டும். |
| சிரேஷ்ட பிரதி ஆணையாளர் | இலங்கை உள்நாட்டு இறைவரிச் சேவையின் தரம் I இலுள்ள அலுவலர் ஒருவராக இருத்தல் வேண்டும். |
| பிரதி ஆணையாளர் | இலங்கை உள்நாட்டு இறைவரிச் சேவையின் தரம் II இலுள்ள அலுவலர் ஒருவராக இருத்தல் வேண்டும். |
| உதவி ஆணையாளர் | இலங்கை உள்நாட்டு இறைவரிச் சேவையின் தரம் III இலுள்ள அலுவலர் ஒருவராக இருத்தல் வேண்டும். |

**குறிப்பு** : சிரேஷ்ட பிரதி ஆணையாளர் பதவியானது இலங்கை உள்நாட்டு இறைவரிச் சேவையின் தரம் II இலிருந்து தரம் I இற்குத் தரமுயர்வு பெறுகின்ற எனினும் தரம் I இற்குரிய பதவி கிடைக்காத தரம் I இலிலுள்ள அலுவலர்களுக்கான பதவிப் பெயராகும். இப்பதவி சேவை மூப்பினைக் காட்டுவதற்காக மாத்திரமுரிய ஒரு பதவிப்பெயராகும். கடமைகள், பொறுப்புக்கள் மற்றும் பதவிக்குரிய பயன்களில் எவ்வித வேறுபாடுமற்ற ஒரு பதவியாகும்.

*12.2* ***தெரிவு செய்யப்படும் முறை:***

(அ) ஆணையாளர் - தரம் I இலிருந்து சேவை மூப்பின் அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளுக்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமனம் வழங்கப்படும்;

(ஆ) சிரேஷ்ட ஆணையாளர் - விசேட தரத்திலான சேவை மூப்பின் அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளுக்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமனங்கள் மேற்கொள்ளப்படும்;

(இ) பிரதி ஆணையாளர் நாயகம் - விசேட தரத்திலான சேவை மூப்பின் அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளுக்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமனங்கள் மேற்கொள்ளப்படும்;

(ஈ) ஆணையாளர் நாயகம் - அமைச்சரவையினால் நியமிக்கப்படுவார்.

13. ஒவ்வொரு நியமனம் தொடர்பிலும் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் 1589/30 ஆம் இலக்கத்தைக் கொண்ட 2009.02.20 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட செயலொழுங்குவிதிகளில் காட்டப்படும் பொது நிபந்தனைகள் ஏற்புடையதாகும்.

14. **வரைவிலக்கணங்கள் :**

14.1 அரசாங்க வர்த்தமானி அல்லது அதிவிசேட வர்த்தமானி என்பது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியைக் குறிக்கும்.

14.2 சேவை என்பது இலங்கை உள்நாட்டு இறைவரிச் சேவையைக் குறிக்கும்.

14.3 சேவைப் பிரமாணக் குறிப்பு என்பது இலங்கை உள்நாட்டு இறைவரிச் சேவையின் பிரமாணக் குறிப்பைக் குறிக்கும்.

14.4 செயலாளர் என்பது நிதி விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளரைக் குறிக்கும்.

14.5 "செயலூக்கம்மிக்கதான சேவைக்காலம்" என்பது தனது பதவிக்குரிய சம்பளத்தைப் பெற்று உண்மையிலேயே கடமையில் ஈடுபட்ட காலத்தைக் குறிக்கும். அரசாங்கத்தினால் அனுமதிக்கப்பட்ட பிரசவ விடுமுறை தவிர ஏனைய சம்பளமற்ற விடுமுறைகள் அனைத்தும் செயலூக்கம்மிக்கதுமான சேவைக்காலத்தில் கணக்கிலெடுக்கப்படமாட்டாது.

14.6 திருப்திகரமான சேவைக்காலம் என்பது அரசாங்க அலுவலர் ஒருவர் வினைத்திறனுடனும் ஊக்கத்துடனும் கடமைகளை மேற்கொள்வதன் ஊடாகவும் சித்தியடைய வேண்டியிருந்த வினைத்திறன் தடை தாண்டல்களில் சித்தியடைவதன் ஊடாகவும், மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த பதவியை நிரந்தரமாக்குவதற்கு அவசியமான தகைமைகளைப் பூர்த்தி செய்வதன் ஊடாகவும், அக்காலத்தில் பெறப்பட வேண்டியிருந்த சம்பள ஏற்றங்கள் அனைத்தையும் பெற்றதும் அவர் தண்டனைக்குரிய எதனையும் செய்யாததுமான காலப்பகுதியைக் குறிக்கும்.

15. சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்யும் போது ஏதேனும் ஒரு வருடத்தில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட வேண்டிய எண்ணிக்கையானது அவ்வருடத்தின் யூன் 30 ஆந் திகதியன்று அச்சேவையில் நிலவும் பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கையாக அமைதல் வேண்டும்.

16. **சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்தலும் தரத்தின் அடிப்படையிலான தரமுயர்வு வழங்கலும்:**

சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்தல் மற்றும் தரத்தின் அடிப்படையில் தரமுயர்வு வழங்குதல் என்பன இப்பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள முறைமைகளின் கீழ் மாத்திரமே மேற்கொள்ளப்பட வேண்டும்.

17. **ஓய்வு பெறுவதற்கான மாற்றுவழிமுறை:**

உரிய திகதி வரை சேவையிலுள்ள விருப்பத்தின் அடிப்படையில் ஓய்வுபெறும் வயதை அடையாத அலுவலர் ஒருவர் அவரது கோரிக்கையின் பேரில், ஓய்வூதியப் பிரமாணக் குறிப்பின் 7 ஆம் பிரிவின் கீழ் சேவையிலிருந்து ஓய்வு பெறுவதற்கு விருப்பம் தெரிவிப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும். அவ்வாறான நிவாரணம் ஒன்றை வழங்குமளவிற்கு இப்பிரமாணக் குறிப்பின் ஏற்பாடுகள் மூலம் பாதகமான விளைவுகள் அவ் அலுவலருக்கு ஏற்பட்டுள்ளது என அரசாங்க சேவை ஆணைக்குழு ஏற்றுக்கொள்ளும் பட்சத்தில் உரிய தினத்திலிருந்து 05 வருட காலத்தினுள் அவர் அவ்விருப்பத்தை வெளிப்படுத்த முடியும்.

18. **சேவையில் உள்ள அலுவலர்களை மீள் கட்டமைக்கப்பட்ட புதிய தர முறைமைக்கு உள்வாங்குதல்:**

இச்சேவைப் பிரமாணக் குறிப்பு நடைமுறைக்கு வரும் திகதியில் சேவையிலுள்ள அலுவலர்கள் கீழே விபரிக்கப்பட்டுள்ளவாறு, மீள்கட்டமைக்கப்பட்ட சேவையின் தர முறைமைக்கு உள்வாங்கப்படுவர். உள்வாங்கலின் காரணமாக அலுவலர்களின்

சம்பளங்களில் அல்லது சம்பள ஏற்றத் திகதிகளில் மாற்றங்கள் நிகழ மாட்டாது. அத்துடன் அலுவலர்களின் சேவை மூப்பிலும் மாற்றங்கள் நிகழ மாட்டாது.

(அ) உள்நாட்டு இறைவரிச் சேவையின் வகுப்பு II தரம் II இலுள்ள அலுவலர்கள் தரம் III இற்கு உள்வாங்கப்படுவர்.
(ஆ) உள்நாட்டு இறைவரிச் சேவையின் வகுப்பு II தரம் I இலுள்ள அலுவலர்கள் தரம் II இற்கு உள்வாங்கப்படுவர்.
(இ) உள்நாட்டு இறைவரிச் சேவையின் வகுப்பு I இலுள்ள அலுவலர்கள் தரம் I இற்கு உள்வாங்கப்படுவர்.
(ஈ) உள்நாட்டு இறைவரிச் சேவையின் சிரேஷ்ட நிறைவேற்று ஊழியர் வகையில் சம்பளம் பெறும் அலுவலர்கள் விசேட தரத்திற்கு உள்வாங்கப்படுவர்.

19. **இடைக்கால ஏற்பாடுகள்:**

இடைக்கால ஏற்பாடுகள் 2018.01.01 ஆந் திகதி வரை நடைமுறையிலிருக்கும்.

19.1 ***இலங்கை உள்நாட்டு இறைவரிச் சேவையின் தரம் III இற்கு தரமுயர்த்துதல் :***

இச்சேவைப் பிரமாணக் குறிப்பு நடைமுறைக்கு வரும் திகதியில், ஏற்கனவே உள்நாட்டு இறைவரிச் சேவையில் காணப்பட்ட சேவைப் பிரமாணக் குறிப்பின் கீழ் சேவையிலுள்ள வகுப்பு III இலுள்ள வரி உத்தியோகத்தர்களும் சிரேஷ்ட வரி உத்தியோகத்தர்களும் இங்கு கீழே விபரிக்கப்படுகின்ற ஏற்பாடுகளுக்கு இணங்க இடைக்காலத்தினுள் இச்சேவையின் தரம் III இற்கு தரமுயர்த்தப்படுவர்.

(i) இச்சேவைப் பிரமாணக் குறிப்பு நடைமுறைக்கு வரும் திகதியில் ஏற்கனவே உள்நாட்டு இறைவரிச் சேவையில் காணப்பட்ட சேவைப் பிரமாணக் குறிப்பின் வகுப்பு II தரம் II இற்கான தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ள வகுப்பு III தரம் I இலுள்ள சிரேஷ்ட வரி உத்தியோகத்தர்கள் இச்சேவைப் பிரமாணக் குறிப்பின் தரம் III இற்கு தரமுயர்த்தப்படுவர்.

(ii) இடைக்கால ஏற்பாடுகளின் கீழ் பஞ்சாங்க வருடமொன்றில் இச்சேவைப் பிரமாணக் குறிப்பின் கீழ் ஏற்படும் இலங்கை உள்நாட்டு இறைவரிச் சேவையின் தரம் III இற்கான பதவி வெற்றிடங்களில் 50% கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் சேவை மூப்பினை அடிப்படையாகக் கொண்டு இலங்கை உள்நாட்டு இறைவரிச் சேவையின் ஏற்கனவே காணப்பட்டசேவைப் பிரமாணக் குறிப்பின் கீழ் வகுப்பு III தரம் I இலுள்ள சிரேஷ்ட வரி உத்தியோகத்தர்களைத் தரமுயர்த்துவதன் மூலம் நிரப்பப்படும்.

(iii) இடைக்கால ஏற்பாடுகளின் கீழ் பஞ்சாங்க வருடமொன்றில் ஏற்படும் பதவி வெற்றிடங்களில் 50% ஏற்கனவே காணப்பட்ட சேவைப் பிரமாணக் குறிப்பின் அடிப்படையில் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் இலங்கை உள்நாட்டு இறைவரிச் சேவையின் ஏற்கனவே காணப்பட்டசேவைப் பிரமாணக் குறிப்பின் கீழ் வகுப்பு III தரம் II இல் அல்லது வகுப்பு III இன் தரம் I இலுள்ள பின்வரும் தகைமைகளைக் கொண்ட அலுவலர்களை தரமுயர்த்துவதன் மூலம் நிரப்பப்படும்.

(அ) வகுப்பு III தரம் I இலிலுள்ள சிரேஷ்ட வரி உத்தியோகத்தர்கள்.
(ஆ) வகுப்பு III இல் 10 வருடங்களுக்குக் குறையாத செயலூக்கம்மிக்க சேவைக்காலத்தைக் கொண்டுள்ள வரி உத்தியோகத்தர்கள்.
(இ) வகுப்பு III இல் வரி உத்தியோகத்தர் பதவியில் 03 வருடங்களுக்கு குறையாத செயலூக்கம் மிக்கதும் திருப்திகரமானதுமான சேவைக்காலத்தைக் கொண்டுள்ள பட்டதாரிகள்.
(ஈ) இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் இடைநிலைப் பரீட்சையில் அல்லது இலங்கை தொழில்நுட்ப கல்லூரியில் கணக்கியல் அல்லது வர்த்தகம் தொடர்பான டிப்ளோமா பாடநெறியில் இடைநிலைப் பரீட்சையில் அல்லது பட்டய முகாமைத்துவக் கணக்காளர் நிறுவனத்தின் (CIMA) பகுதி I, II, III என்பவற்றில் சித்தியடைதல் அல்லது சன்றிதழ் பெற்ற மற்றும் உத்தரவு பெற்ற கணக்காளர் நிறுவனத்தின் பகுதி I, II, III பகுதிகளில் சித்தியடைந்தள்ள, அத்துடன் முன்னைய பிரமாணக் குறிப்பின் கீழ் வகுப்பு III இல் செயலூக்கம்மிக்கதும் திருப்திகரமானதுமான 05 வருடங்களுக்குக் குறையாத சேவைக்காலத்தைக் கொண்டுள்ள அலுவலர்கள்.

19.2 ***இலங்கை உள்நாட்டு இறைவரிச் சேவையின் தரம் II இற்குத் தரமுயர்த்துதல்:***

சேவையின் வகுப்ப II இன் தரம் II இலுள்ள அலுவலர்கள் பத்து (10) வருட சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்ததன் பின்னர் மற்றும் முன்னைய சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள வகுப்பு II இன் தரம் I இற்கு தரமுயர்த்துவதற்கான தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்ததன் பின்னர், அத்தேவைப்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்ட தினத்திலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் இலங்கை உள்நாட்டு இறைவரிச் சேவையின் தரம் III இலுள்ள அலுவலர்கள் இப்பிரமாணக் குறிப்பின் கீழ் உள்நாட்டு இறைவரிச் சேவையின் தரம் II இற்கு தரமுயர்த்தப்படுவர்.

**குறிப்பு** : இடைக்காலத்தில் இச்சேவைப் பிரமாணக் குறிப்பின் பந்தி 11.1.2 இல் குறிப்பிடப்பட்டுள்ள விசேட செயலாற்றுகை அடிப்படையில் தரமுயர்வு வழங்குவதற்காக எழுத்து மூலமான உளச்சார்புப் பரீட்சையொன்று நடாத்தப்படும். அப்பரீட்சையில் சித்தியடையும் அலுவலர்கள், தரமுயர்வுக்கான உளச்சார்புப் பரீட்சை நடைபெற்ற தினத்திலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் தரம் II இற்கு தரமுயர்த்தப்படுவர். விசேட செயலாற்றுகையின் கீழ் தரம் II இற்குத் தரமுயர்வு பெறும் அவ் அலுவலர்கள், தரம் III இற்கு நியமனம் பெற்று 13 வருடங்கள் செயலூக்கம்மிக்கதும் திருப்திகரமானதுமான சேவைக் காலம் பூர்த்தியடையும் தினத்திலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில், தரம் I இற்குத் தரமுயர்த்தப்படுவர்.

*19.3* ***இலங்கை உள்நாட்டு இறைவரிச் சேவையின் தரம் I இற்கு தரமுயர்த்துதல்:***

இங்கு கீழே குறிப்பிடப்படும் தகைமைகளைப் பூர்த்தி செய்யும் தினம் அல்லது தரம் I இல் வெற்றிடங்களை நிரப்பும் தினம் ஆகிய இரண்டில் முதலில் வரும் தினத்திலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் இலங்கை உள்நாட்டு இறைவரிச் சேவையின் அலுவலர்கள் இச்சேவைப் பிரமாணக் குறிப்பின் கீழ் உள்நாட்டு இறைவரிச் சேவையின் தரம் I இற்குத் தரமுயர்த்தப்படுவர் :-

(i) இலங்கை உள்நாட்டு இறைவரிச் சேவையில் ஏற்கனவே காணப்பட்ட சேவைப் பிரமாணக் குறிப்பின் கீழ், வகுப்பு II இன் தரம் II இல், வகுப்பு II தரம்I இல் மற்றும் இப்பிரமாணக் குறிப்பின் கீழ் தரம் II இல் பணிபுரிந்த சேவைக் காலங்களின் கூட்டுத் தொகையாக பதின்மூன்று (13) வருட செயலூக்கமிக்க சேவைக் காலத்துடன் தரம் II இல் மூன்று (03) வருடங்கள் செயலூக்கமிக்கதும் திருப்திகரமானதுமான சேவைக் காலத்தையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்;

(ii) தற்போதைய சேவைப் பிரமாணக் குறிப்பில் உள்ள முதலாம் இரண்டாம் திணைக்களப் பரீட்சைகளில் சித்தியடைந்திருத்தல்;

(iii) தரமுயர்வுக்குத் தகுதிபெறுவதற்கு உடன் முந்திய ஐந்து வருட காலத்தினுள் உரிய திகதிகளிலேயே அனைத்து சம்பள ஏற்றங்களையும் பெற்றிருத்தல்; மற்றும்

(iv) தரமுயர்வுக்குத் தகுதிபெறுவதற்கு உடன் முந்திய ஐந்து வருட காலத்தில் ஏதேனும் ஒரு குற்றத்திற்காக ஏதேனும் ஒழுக்காற்றுத் தண்டனை விதிக்கப்பட்டவராக இருத்தல் கூடாது (எச்சரித்தல் தவிர) அத்துடன்;

(v) தரமுயர்வுக்குத் தகுதிபெறுவதற்கு உடன் முந்திய ஐந்து வருட காலத்தினுள் வருடாந்த செயலாற்றுகைத் தரக்கணிப்பு அறிக்கைகளில் திருப்திகரமான மட்டத்தை அல்லது அதனைவிட உயர்மட்டத்தினை பெற்றிருத்தல்.

*19.4* ***இலங்கை உள்நாட்டு இறைவரிச்சேவையின் விசேட தரத்திற்கு தரமுயர்த்துதல்:***

இலங்கை உள்நாட்டு இறைவரிச் சேவையின்விசேட தரத்திற்கான தரமுயர்வுகள் இப்பிரமாணக் குறிப்பின் 11.3 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க மேற்கொள்ளப்படும்.

**குறிப்பு** .- மேலே பந்தி 19.4 இல் உள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க, விசேட தரத்துக்கு தரமுயர்த்துவதற்கு தகைமைபெறும் இலங்கை உள்நாட்டு இறைவரிச் சேவையின் II-II தரத்திற்கு மேலுள்ள உயர் தரங்களில் 25 வருடங்கள் செயலூக்கம் மிக்க சேவைக் காலத்தைக் கொண்டுள்ள அலுவலர்கள் அதற்கான உறுப்புரை 11.3.1 (i) இல் குறிப்பிட்டுள்ளவாறு பட்டப்பின் பட்டம் ஒன்று பெற்றிருத்தல் வேண்டும் என்ற தேவைப்பாட்டிலிருந்து விடுவிக்கப்படுவர். இச்சலுகையானது 2012.10.01 ஆந் திகதி முதல் 2015.12.31 ஆந் திகதி வரை நடைமுறையில் இருக்கும். இச்சலுகைக் காலத்தின் பின்னர் ஏனைய அனைத்து அலுவலர்களும் இப்பிரமாணக் குறிப்பின் பந்தி 11.3 இல் குறித்துரைக்கப்பட்டுள்ள தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்தல் வேண்டும்.

*20.* இப்பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு மேலதிகமாக அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கு இணங்க அவசியமான தேர்ச்சிகளையும் திறன்களையும் அனைத்து அலுவலர்களும் குறித்துரைக்கப்பட்டவாறு பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

*21.* ***ஏனைய விடயங்கள்*** :

*21.1* உள்நாட்டு இறைவர் ஆணையாளர் நாயகத்தின் நிர்வாகத்தின் கீழ் உள்ள அல்லது நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்படக்கூடிய அல்லது கட்டளைச் சட்ட உப ஒழுங்குவிதிகள் மற்றும் சுற்றறிக்கைகள் ஏற்பாடுகளில் குறிப்பிட்டுள்ளவாறு சிரேஷ்ட பிரதி உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தினால் அல்லது உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தினால் மேற்கொள்ளப்பட்ட அல்லது மேற்கொள்ளப்படவுள்ள கடமைகள் இப்பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தினால் மேற்கொள்ளப்படும்.

21.2 உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தின் நிர்வாகத்தின் கீழ் உள்ள அல்லது நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரப்படக்கூடிய அல்லது கட்டளைச் சட்ட உப ஒழுங்குவிதிகள் மற்றும் சுற்றறிக்கை ஏற்பாடுகளில் குறிப்பிட்டுள்ளவாறு உள்நாட்டு இறைவரி பிரதி ஆணையாளர் நாயகங்களினால் மேற்கொள்ளப்பட்ட அல்லது மேற்கொள்ளப்படவுள்ள கடமைகள் இப்பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பிரதி ஆணையாளர் நாயகங்களினால் மேற்கொள்ளப்படும்.

21.3 உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தின் நிர்வாகத்தின்கீழ் உள்ள அல்லது நிர்வாகத்தின்கீழ் கொண்டுவரப்படக்கூடிய அல்லது கட்டளைச் சட்ட உப ஒழுங்குவிதிகள் மற்றும் சுற்றறிக்கை ஏற்பாடுகளில் குறிப்பிட்டுள்ளவாறு உள்நாட்டு இறைவரி சிரேஷ்ட ஆணையாளர்களினால் மேற்கொள்ளப்பட்ட அல்லது மேற்கொள்ளப்படவுள்ள கடமைகள் இப்பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பிரதி ஆணையாளர் நாயகங்களினால் மேற்கொள்ளப்படும்.

21.4 உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தின் நிர்வாகத்தின்கீழ் உள்ள அல்லது நிர்வாகத்தின்கீழ் கொண்டுவரப்படக்கூடிய அல்லது கட்டளைச் சட்ட உப ஒழுங்குவிதிகள் மற்றும் சுற்றறிக்கை ஏற்பாடுகளில் குறிப்பிட்டுள்ளவாறு உள்நாட்டு இறைவரி ஆணையாளர்களினால் மேற்கொள்ளப்பட்ட அல்லது மேற்கொள்ளப்படவுள்ள கடமைகள் இப்பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள சிரேஷ்ட ஆணையாளர்களினால் மேற்கொள்ளப்படும்.

21.5 உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தின் நிர்வாகத்தின்கீழ் உள்ள அல்லது நிர்வாகத்தின்கீழ் கொண்டுவரப்படக்கூடிய அல்லது கட்டளைச் சட்ட உப ஒழுங்குவிதிகள் மற்றும் சுற்றறிக்கை ஏற்பாடுகளில் குறிப்பிட்டுள்ளவாறு உள்நாட்டு இறைவரி பிரதி ஆணையாளர்களினால் மேற்கொள்ளப்பட்ட அல்லது மேற்கொள்ளப்படவுள்ள கடமைகள் இப்பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள ஆணையாளர்களினால் மேற்கொள்ளப்படும்.

21.6 உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தின் நிர்வாகத்தின்கீழ் உள்ள அல்லது நிர்வாகத்தின்கீழ் கொண்டுவரப்படக்கூடிய அல்லது கட்டளைச் சட்ட உப ஒழுங்குவிதிகள் மற்றும் சுற்றறிக்கை ஏற்பாடுகளில் குறிப்பிட்டுள்ளவாறு உள்நாட்டு இறைவரி சிரேஷ்ட வரி மதிப்பீட்டாளர்களினால் மேற்கொள்ளப்பட்ட அல்லது மேற்கொள்ளப்படவுள்ள கடமைகள் இப்பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள சிரேஷ்ட பிரதி ஆணையாளர்களினாலும் பிரதி ஆணையாளர்களினாலும் மேற்கொள்ளப்படும்.

21.7 உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தின் நிர்வாகத்தின்கீழ் உள்ள அல்லது நிர்வாகத்தின்கீழ் கொண்டுவரப்படக்கூடிய அல்லது கட்டளைச் சட்ட உப ஒழுங்குவிதிகள் மற்றும் சுற்றறிக்கை ஏற்பாடுகளில் குறிப்பிட்டுள்ளவாறு உள்நாட்டு இறைவரி வரிமதிப்பீட்டாளர்களினால் மேற்கொள்ளப்பட்ட அல்லது மேற்கொள்ளப்படவுள்ள கடமைகள் இப்பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள உதவி ஆணையாளர்களினால் மேற்கொள்ளப்படும்.

22. **ஏற்பாடுகள் காணப்படாத விடயங்கள்.**- இப்பிரமாணக் குறிப்பின் ஏற்பாடுகளுக்கு புறம்பான விடயங்கள் தொடர்பான தீர்மானங்கள் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படும்.

இப்பிரமாணக் குறிப்பின் சிங்கள, தமிழ், ஆங்கில ஆகிய மொழிகளிலான வாசகங்களுக்கிடையில் ஏதேனும் முரண்பாடுகள் காணப்படுமிடத்து சிங்கள மொழியிலான உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

**பின்னிணைப்பு 01**

**இலங்கை உள்நாட்டு இறைவரிச் சேவையின் தரம் III இற்கு நியமிப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை தொடர்பான விபரம் :**

1. பரீட்சை நடைமுறைகள் மற்றும் பாடத்திட்டங்கள்.- இப்பரீட்சையானது பின்வரும் வினாப்பத்திரங்களைக் கொண்டிருக்கும் :-

**பகுதி "அ"**

(i) கிரகித்தல்
(ii) நுண்ணறிவு
(iii) பொது அறிவு

*பகுதி "ஆ"*

(i) நேர்முகப் பரீட்சை (இதற்குப் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது).
எழுத்துப் பரீட்சையின் பெறுபேறுகள் வெளியிடப்பட்டதன் பின்னரே நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும்.

2. **பரீட்சை நடைமுறைகள் - மொழிமூலம் :**

(அ) இப்பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும்.
(ஆ) பரீட்சார்த்திகள் விரும்பிய ஏதேனும் ஒரு மொழியில் பரீட்சைக்குத் தோற்ற முடியும்.

**குறிப்பு :**

(i) பரீட்சார்த்திகள் இப்பரீட்சையின் அனைத்து வினாப்பத்திரங்களுக்கும் ஒரே மொழியிலேயே தோற்றுதல் வேண்டும்.
(ii) பரீட்சார்த்திகள் தமது விண்ணப்பங்களில் குறிப்பிட்ட மொழிமூலத்தை மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.
(iii) ஒவ்வொரு பரீட்சார்த்தியும் மூன்று வினாப்பத்திரங்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.
(iv) ஒரு தடவையில் ஆட்சேர்ப்புச் செய்யப்படுவோர் எண்ணிக்கை அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும்.

3. **பரீட்சை முறை :**

*பகுதி "அ"*

(i) கிரகித்தல் - 2 மணித்தியாலங்கள் - 100 புள்ளிகள்
(ii) நுண்ணறிவு - 1 மணித்தியாலம் - 100 புள்ளிகள்
(iii) பொது அறிவு - 3 மணித்தியாலங்கள் - 100 புள்ளிகள்

*பகுதி "ஆ"*

(i) நேர்முகப் பரீட்சை (புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது). எழுத்துப் பரீட்சையின் ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் உரிய புள்ளிகளில் ஆகக்குறைந்தது 40 புள்ளிகளையாவது பெறத்தவறும் பரீட்சார்த்திகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட மாட்டார்கள்.

4. **நியமனத்திற்கு தெரிவுசெய்யப்படும் முறை.**- மேலே இலக்கம் 3 இன்கீழ் காட்டப்பட்டுள்ள விடயங்களுக்குட்பட்ட வகையில் பரீட்சையில் அதிக புள்ளிகள் பெற்ற திறமையின் அடிப்படையில் நியமனத்திற்காகப் பரீட்சார்த்திகள் தேர்ந்தெடுக்கப்படுவர்.

5. **பாடத்திட்டம் :**

**பாட இலக்கம் 1 - கிரகித்தல்.**- இவ்வினாப்பத்திரம் இரண்டு பகுதிகளைக் கொண்டதாக அமையும்.

ஒவ்வொரு பகுதிக்கும் சம அளவிலான புள்ளிகள் வழங்கப்படும்.

பகுதி I - இப்பகுதி கட்டுரை, சுருக்கம் எழுதுதல் என்பவற்றைக் கொண்டிருக்கும்.

பகுதி II - பரீட்சார்த்தியின் மொழி தொடர்பான கிரகிக்கும் ஆற்றலை சோதிப்பதற்காகத் தயாரிக்கப்பட்ட வாசகங்கள் சிலவற்றை இரண்டாம் பகுதி கொண்டிருக்கும். இவ்வாசகங்களில் உள்ள கோடிடப்பட்ட சொற்களின் கருத்துக்களை தனிவாக்கியம் ஒன்றில் வெளிப்படுத்துமாறு அல்லது அது தொடர்பில் விவரணக் குறிப்பு ஒன்றை எழுதுமாறு அல்லது மாற்றுத் தொகுதியொன்றிலிருந்து மிகவும் பொருத்தமான கூற்று ஒன்றைத் தெரிவுசெய்யுமாறு அல்லது தரப்பட்டுள்ள வினாக்களுக்கு தரப்பட்ட விடைகளிலிருந்து சரியான விடையைத் தெரிவுசெய்யுமாறு பரீட்சார்த்திகள் வேண்டப்படுவர்.

**பாட இலக்கம் 2 - நுண்ணறிவு.**- பரீட்சார்த்தியின் தர்க்க ரீதியாக விபரிக்கும் ஆற்றல், சரியான விடய ஆய்வு, ஊகித்தறியும் ஆற்றல் என்பவற்றை அளவிடும் நோக்கில் இவ்வினாப்பத்திரம் தயாரிக்கப்படும். இது ஒரு பல்தேர்வு வினாப்பத்திரமாகும்.

**பாட இலக்கம் 3 - பொது அறிவு.**- இவ்வினாப்பத்திரமானது இலங்கையின் பூகோள, அரசியல், சமூக பொருளாதார, கலாசார சூழல் உள்ளிட்ட இலங்கையின் முழுச் சூழல் தொடர்பிலும் சர்வதேச ரீதியில் முக்கியத்துவம் பெறுகின்ற சமகால விடயங்கள் மற்றும் விஞ்ஞான, தொழில்நுட்ப வளர்ச்சி தொடர்பிலும் பரீட்சார்த்திகளின் அறிவை அளவிடும் நோக்கில் தயாரிக்கப்படும்.

6. **நேர்முகப் பரீட்சை.**- ஒவ்வொரு பரீட்சார்த்தியும் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமனம் செய்யப்படும் அரசாங்க அலுவலர்கள் ஐந்து பேரைக் கொண்ட நேர்முகப் பரீட்சைச் சபையொன்றின் மூலம் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்படுவர்.

**பின்னிணைப்பு 2**

**இலங்கை உள்நாட்டு இறைவரிச் சேவையின் தரம் III இற்கு நியமனம் செய்யப்படும் அலுவலர்களுக்காக நடாத்தப்படும் I ஆம் வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சைக்கான பாடத்திட்டம்**

| | | |
|---|---|---|
| **வரிச் சட்டம்** | - | தனியாள் வருமான வரிச் சட்டம், பெறுமதிசேர் வரி உள்ளிட்ட வருமான வரிச் சட்டம் தொடர்பான வினாப்பத்திரங்கள் இரண்டு. |
| **வரி நடைமுறைகளும் வரி நிர்வாகமும்** | - | உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் நிர்வகிக்கப்படும் வரிகள் தொடர்பில் பின்பற்றப்படும் நடைமுறைகள் தொடர்பில் இலங்கையின் வரி நிர்வாகம் தொடர்பான பொது விடயங்களைக் கொண்ட வினாப்பத்திர மொன்று. |
| **கணக்கீடு** | - | (i) இரட்டைப் பதிவு முறைமையின்கீழ் அடங்கும் கணக்குகள் தொடர்பான ஒரு வினாப்பத்திரம் (வரையறுத்த பொறுப்புகளைக் கொண்ட கம்பனிகளின் கணக்குகள் உள்ளடங்க மாட்டா.)<br>(ii) பூரணமற்ற குறிப்புக்கள், தகவல்கள் என்பவற்றின் அடிப்படையில் கணக்குகளைத் தயாரிப்பது தொடர்பான ஒரு வினாப்பத்திரம் |
| **வரி கணக்கிடுதல்** | - | வரிச் சட்டத்திற்கு கணக்கிலக்கம் செய்வதன் மூலம் வரி விதியாகும் அளவை கணக்கிடுவது தொடர்பான வினாப்பத்திரம் (வரையறுத்த பொறுப்புகளைக் கொண்ட கம்பனிகளுக்கான வரிவிதிப்பனவுகள் உள்ளடங்க மாட்டா.) |
| **பொது வணிக அறிவு மற்றும் பொருளாதார விவகாரங்கள்** | - | உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் நிர்வகிக்கப்படும் வரிகள் தொடர்பில் விசேடமாகக் கவனத்தில் எடுத்து பொது வணிக அறிவு மற்றும் பொது நிதி மற்றும் பொருளாதார செயற்பாடுகள், வரி செலுத்துவோரின் உரிமைகள் என்பன தொடர்பான வினாப்பத்திரம் |

* ஏதேனும் ஒரு வினாத்தாளில் சித்தியடையாமை அடுத்த வினாத்தாளில் பெறுபேறு தொடர்பில் எதுவித தாக்கத்தையும் ஏற்படுத்த மாட்டாது.

* I ஆவது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைவதற்கு ஆகக்குறைந்தது 40□ புள்ளிகளைப் பெறுதல் வேண்டும்.

**பின்னிணைப்பு 3**

**இலங்கை உள்நாட்டு இறைவரிச் சேவையின் தரம் II இற்கு நியமனம் செய்யப்படும் அலுவலர்களுக்காக நடாத்தப்படும் II ஆம் வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சைக்கான பாடத்திட்டம்**

II ஆம் வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை பின்வரும் பாடங்களைக் கொண்டிருக்கும் :-

(i) தாபன ஒழுங்குவிதிகள்
(ii) அரச நிதி ஒழுங்குவிதிகள்

ஒரு அலுவலர் சகல பாடங்களுக்கும் ஒரே தடவையில் அல்லது தனித்தனியாக ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகளில் பரீட்சைக்குத் தோற்ற முடியும். ஒவ்வொரு வினாப்பத்திரமும் மூன்று மணித்தியால வினாப்பத்திரங்களாக அமையும்.

***பரீட்சை நடைமுறைகள் :***

***முதலாம் வினாப்பத்திரம் - தாபன ஒழுங்குவிதிகள் :***

*(1) தாபன விதிக்கோவையின் முதலாம் பாகத்தின் பின்வரும் அத்தியாயங்கள்* VII, IX, XI, XII, XIII, XIV, XV, XXIII, XXIV
*(2) தாபன விதிக்கோவையின் இரண்டாம் பாகத்தின் பின்வரும் அத்தியாயங்கள்* XLVII, XLVIII
*(3) அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலொழுங்கு விதிகள்*
*முதலாம் பாகம் -* i *முதல்* iv *வரையான அத்தியாயங்கள்*

***இரண்டாவது வினாப்பத்திரம் - அரச துறையின் நிதி முறைமை :***

(1) *அரச நிதி ஒழுங்குவிதிகள் - முதலாம் பாகம்.* - வருமான மதிப்பீடு, பொறுப்புக்கள் மற்றும் அதிகாரங்கள். வவுச்சர் தயாரித்தல், உறுதிப்படுத்தல், வவுச்சர்களுக்கு கொடுப்பனவு செய்தல், மாற்றல் கொடுப்பனவு மற்றும் திணைக்களங்களுக்கிடையிலான கொடுக்கல் வாங்கல், அரசாங்க நிதி என்பவற்றின் நம்பிக்கை பொறுப்பு, கட்டு நிதி மற்றும் வங்கிக் கணக்குகள், பொது ஒழுங்கு விதிகள், முத்திரை, நியதிச்சட்ட நிதியங்கள் என்பன.

(2) *அரசின் கொள்வனவு நடைமுறைகள்.* - பண்டங்கள், சேவைகள் மற்றும் ஊழியத்தைப் பெறல், விலைமனு கோரல் சபை மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு கட்டமைப்பு, நியமித்தல், அதிகாரங்களும் பணிகளும் விலைமனு மதிப்பீட்டு நடைமுறைகள்

* ஏதேனும் ஒரு வினாத்தாளில் சித்தியடையாமை அடுத்த வினாத்தாளில் பெறுபேறு தொடர்பில் எதுவித தாக்கத்தையும் ஏற்படுத்த மாட்டாது.

* II ஆவது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைவதற்கு ஆகக்குறைந்தது 40□ புள்ளிகளைப் பெறுதல் வேண்டும்.

**பின்னிணைப்பு 4**

**இலங்கை உள்நாட்டு இறைவரி சேவையின் தரம் I இற்கு நியமனம் செய்யப்படுகின்ற அலுவலர்களுக்கான III ஆம் வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை**

ஆற்றல் விருத்தி (Capacity Building) தொடர்பாக உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் பயிற்சி நெறியின் இறுதியில் பெற்றுக்கொள்ளும் சான்றிதழ்.

**பின்னிணைப்பு 5**

**இலங்கை உள்நாட்டு இறைவரிச் சேவையின் தரம் III இற்கு நியமனம் செய்யப்படும் அலுவலர்களுக்கான திணைக்களப் பரீட்சைப் பாடத்திட்டம்**

| | | |
|---|---|---|
| **வரிச்சட்டம்** | - | (i) வருமான வரி, பெறுமதிசேர் வரி சார்ந்த வழக்குகள், சட்டங்கள் தொடர்பான ஒரு வினாப்பத்திரம் |
| | | (ii) உள்நாட்டு அரசிறை திணைக்களத்தால் நிர்வகிக்கப்படும் வருமான வரி, முத்திரைத் தீர்வை மற்றும் ஏனைய வரிகள் தொடர்பிலான நியதிச் சட்டங்களைக் கொண்ட ஒரு வினாப்பத்திரம் |
| **கணக்கீடு** | - | (i) இரட்டைப் பதிவு முறையில் கணக்குப் பதிதல் மற்றும் கணக்கியல் தொடர்பான ஒரு வினாப்பத்திரம் |
| | | (ii) முழுமையற்ற குறிப்புகள் மற்றும் வேறு தகவல்களின் அடிப்படையில் கணக்குகளை தயார்செய்தல் தொடர்பான ஒரு வினாப்பத்திரம் |
| **வரி கணக்கிடுதல்** | - | (i) கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகளை வரிச்சட்டத்தின்படி கணக்கிணக்கம் செய்தல், வரி கணக்கிடல் தொடர்பான ஒரு வினாப்பத்திரம் |

| | | |
|---|---|---|
| **வரிக்கொள்கையும் வரி நிருவாகமும்** | - | இலங்கை தொடர்பில் விசேடமாகக் கவனத்திற்கொண்டு, தயாரிக்கப்பட்ட வரிக்கொள்கை மற்றும் வரி நிர்வாகம் பற்றிய விடயங்களைக் கொண்ட வினாப்பத்திரமொன்று |
| **கணனிப் பயன்பாடு** | - | உள்நாட்டு இறைவரித் திணைக்களம் தொடர்பில் விசேடமாகக் கவனத்திற்கொண்டு தயாரிக்கப்பட்ட, கணனிப் பயன்பாடு தொடர்பான அடிப்படை விடயங்களை உள்ளடக்கிய வினாப்பத்திரமொன்று |

(சித்தியடைவதற்கு 40□ புள்ளிகளைப் பெறுதல் வேண்டும்.)

* ஏதேனும் ஒரு வினாத்தாளில் சித்தியடையாமை அடுத்த வினாத்தாளில் பெறுபேறு தொடர்பில் எதுவித தாக்கத்தையும் ஏற்படுத்த மாட்டாது.

* திணைக்களப் பரீட்சையில் சித்தியடைவதற்கு ஆகக்குறைந்தது 40□ புள்ளிகளைப் பெறுதல் வேண்டும்.

### பின்னிணைப்பு 6

### இலங்கை உள்நாட்டு இறைவரிச் சேவையின் தரம் III இல் இருந்து தரம் II இற்கு விசேட செயலாற்றுகையின் கீழ் தரமுயர்த்துவதற்கான பாடத்திட்டம்

(அ) **எழுத்துப் பரீட்சை**.- உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் நிர்வகிக்கப்படுகின்ற வருமான வரிகள், நேரில் வரிகள் தொடர்பான பல்தேர்வு வினாப்பத்திரமொன்று

**வரிச்சட்டம்**.- இந்தப் பரீட்சை 2008.12.31 ஆந் திகதியின் பின்னர் உள்நாட்டு இறைவரிச் சேவைக்கு நியமனம் செய்யப்பட்ட அல்லது தரமுயர்வு வழங்கப்பட்ட அலுவலர்களுக்கு மட்டும் உரியதாகும்.

(ஆ) மொத்தப் புள்ளி 100 ஆகும். பரீட்சையில் சித்தியடைய குறைந்தபட்சம் 60□ புள்ளிகளைப் பெறுதல் வேண்டும்.

(இ) விசேட செயலாற்றுகையின் அடிப்படையில் தரமுயர்வு வழங்கும் பரீட்சை வருடத்தில் ஒரு தடவை மாத்திரம் நடாத்தப்படும்.

### பின்னிணைப்பு 7

### இலங்கை உள்நாட்டு இறைவரிச் சேவையின் தரம் II இன் அலுவலர்கள் பூர்த்திசெய்யவேண்டிய பட்டப்பின் படிப்புத் தகைமைகள்

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து அல்லது பட்டம் வழங்கும் நிறுவனமாக அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் அல்லது அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட உயர் கல்வி நிறுவனம் ஏதேனும் ஒன்றிலிருந்து பின்வரும் ஏதேனும் ஒரு பாடத்திலோ அல்லது அது உட்படும் துறையிலோ பட்டப்பின் பட்டம் ஒன்றை பெற்றிருத்தல் வேண்டும். இப்பட்டப்பின் பட்டமானது குறைந்தது ஒரு வருட கால கல்வி நடவடிக்கைகளை கொண்டிருத்தலும் வேண்டும் :

(அ) பொருளியல்/பொருளியல் அளவீடுகள்/நிதிப் பொருளியல்/அபிவிருத்திப் பொருளியல்

(ஆ) வணிகம்/நிதி முகாமைத்துவம்/வியாபார முகாமைத்துவம்/அரச முகாமைத்துவம்/அரச நிருவாகம்/அரச கொள்கை/வரி அறவிடல்/வரி நிருவாகம்/சர்வதேச வர்த்தகம்

(இ) கணிதம்/புள்ளிவிபரவியல்/அளவைசார் முறைமைகள் மற்றும் அளவைசார் பகுப்பாய்வுகள்

(ஈ) தகவல் தொழில்நுட்பம்/கணனி விஞ்ஞானம்/முகாமைத்துவ தகவல் முறைமை (MIS)

(உ) மனிதவள முகாமைத்துவம்/சந்தைப்படுத்தல் முகாமைத்துவம்/தொடர்பாடல்/உற்பத்தி முகாமைத்துவம்/சட்டம்

(ஊ) அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வேறு பாடத்துறைகள்

4-645

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.